***கவனிக்க***.- *2019.06.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2131 - 2019 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2019.07.05**

*2131 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 156 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 157 |


***கவனிக்க***.- *வணிகக் கப்பற்றொழில் (திருத்தம்) சட்டமூலம் 2019, யூன் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2019, யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



155- B 81539 - 353 (2019/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வென்னப்புவ பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் யு. எஸ். என். ப்ரனாந்து ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1996, மே 20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள புத்/ வென் / ப்ர / 34160 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பண்டிருப்புவ காலவத்த இல. 02 எனும் முகவரியில் வசிக்கும் ரத்னாயக்க முதியன்சேலாகே சிறிசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாரவில மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் புத்/ வென் / 23/ 34 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.08.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமை யாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.07.26 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

புத்தளம் நிருவாக மாவட்டத்தின், வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவின் தெற்கு பிடிகம் கோரளே கிழக்கு பண்டிருப்புவ (முன்-வடக்கு பண்டிருப்புவ) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பண்டிருப்புவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 52/13/3 மற்றும் 4 ஆம் இலக்க வெளிக்களத்தாளில்/நில அளவையாளர் அத்தியட்சகர் புத்தளம் என்பவரால் தயாரிக்கப்பட்டு முபிபு 3302 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் 198 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டெயர் 0.035 /ஏக்கர்-றூட்-பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

காணியின் பெயர் - காலவத்த இல. 02

வடக்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 178 மற்றும் 175 ;
கிழக்கு : காணித்துண்டுகள் இலக்கம் 199;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 10;
மேற்கு : காணித்துண்டுகள் இலக்கம் 197.

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

2019, பெப்புருவரி 27.

07- 66/1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் யு. எஸ். என். ப்ரனாந்து ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1982, ஏப்பிறல் 26 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள புத் / வென் / ப்ர / 187 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பொரலெஸ்ஸ கொஸ்கஹவத்த அல்லது எலன் எஹோடவத்த எனும் முகவரியில் வசிக்கும் தெபுவனகே ரொசலின் என்பவருக்கு கையளிக்கப்பட்டு, மாரவில மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் வென் /3/215 ஆம் இலக்கத்தின் கீழ் 1985.07.12 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு அவருடைய கணவன் மற்றும் திருமணமாகாத மகன் ஆகியோரின் இறப்பிற்கு பின் பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2019.07.26 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

புத்தளம் நிருவாக மாவட்டத்தின், வென்னப்புவ பிரதேசச் செயலாளர் பிரிவின் கம்மல் பத்துவே தெற்கு பொரலெஸ்ச (முன்-பொரலெஸ்ஸ) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொரலெஸ்ஸ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், - என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு எ. அய் 21/6-14 ஆம் இலக்க வெளிக்களத்தாளில்/ நில அளவையாளர் அத்தியட்சகர் புத்தளம் என்பவரால் தயாரிக்கப்பட்டு பிபிள 1651 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் 11 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டெயர் /ஏக்கர் 01 றூட் 1.90 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக்கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

காணியின் பெயர் - கொஸ்கஹவத நொஹோத் எலன் எஹோடவத்த

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 12 ;
கிழக்கு : காணித்துண்டுகள் இலக்கங்கள் 13 மற்றும் 16 இன் பகுதி ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 09 இன் பகுதி;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 10.

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

2019, பெப்புருவரி 27.

07- 66/2

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/55125.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : SPLC/ MAT/ 1 / PAS/3-3.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 254, பஸ்கொட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பஸ்கொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அரச நில அளவையாளரினால் வரையப்பட்ட F.V.P. வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 896 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.113 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சங்க நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு வரையறுக்கப்பட்ட பெரலபனாதர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 895 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 897;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 722;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 891.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதித்த 2019.05.07 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சரவர்களினால் அனுமதி வழங்கப்பட்ட வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 2% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2019.05.07 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக்குத்தகை பெறப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்யும் கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 05.

07-67

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/57010.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : EP/ 28/ LB/ LS/ BAT/ KPS/ 06.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 203, கிரான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கிம்புலா தோனா எனும் கிராமத்தில் அமைந்துள்ள BT/ KPS/ 2017/ 117 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு ஏ இல் காட்டப்பட்டுள்ளதும் 0.7081 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வணிக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு பல்மைரா பாம் (தனியார்) வ-து விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பீ. பீ. மட 524 இல் காணித்துண்டு இல. 02 ;
கிழக்கு : கடற்கரை ஒதுக்கம் ;
தெற்கு : பீ. பீ. மட 524 இல் காணித்துண்டு இல. 05 ;
மேற்கு : பீ. பீ. மட 524 இல் காணித்துண்டு இல. 01.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.06.13 தொடக்கம் 2049.06.12 வரை)

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை செயற்படுத்தப்படுகின்ற வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபட வேண்டும். இந்த குத்தகைப்பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி குறித்த வணிக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2019.06.13 ஆந் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க் குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

ஜீ. பிரணவன்,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, யூலை 05.

07-189

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
***(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)***

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1.* பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

*2.* தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

*3.* அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

*4.* பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

*5.* **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

*6.* **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*7.* **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

*8.* வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*9.* நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

*10.* அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

*12.* **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

*13.* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

*14.* ***2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

***முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.***

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

## அட்டவணை - 2019

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2019 |
| | | வெள்ளி | 12.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2019 |
| | | வெள்ளி | 19.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2019 |
| | | வெள்ளி | 26.07.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2019 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2019 |
| | | வெள்ளி | 09.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2019 |
| | | வெள்ளி | 16.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2019 |
| | | வெள்ளி | 23.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.08.2019 |
| | | வெள்ளி | 30.08.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2019 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2019 |
| | | வியாழன் | 12.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2019 |
| | | வெள்ளி | 20.09.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2019 |
| | | வெள்ளி | 27.09.2019 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.09.2019 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.